கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

முன்னிலை:– திரு.எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27 ஆம் நாள் வியாழக்கிழமை

**இடைநிலை மனு எண்.3/2025**
அதன்
**அசல் வழக்கு எண்.94/2021**
( CNR No.TNTS 01 000402 2021 )

தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம்
அதன் நிர்வாக இயக்குநகர் மூலம்
வாசுதேவநல்லூர் . . . மனுதாரர்/பிரதிவாதி

..எதிர்..

சுப்பிரமணி நாடார் – வடிவுஅம்மாள்
கல்வி அறக்கட்டளைக்காக அதன்
நிறுவனம், தற்கால அறங்காவலருமான
தங்கப்பழம் மூலமாக . . . எதிர்மனுதாரர்/வாதி

இந்த இடைநிலை மனுவானது கடந்த 17.11.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.முருகேசன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.ஜெகதீசன் அவர்களும் ஆஜராகி நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், இரு தரப்பு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இந்த மனுவானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 8 விதி 6 ஏ மற்றும் 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்கோரிக்கையுடன் கூடிய கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**:–

மனுதாரர் பிரதிவாதி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஆவார். அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு,

வாதி, 2 ஆம் தபசில் சொத்துக்களில் சிறிது சிறிதாக அத்துமீறி உள்ளே நுழைந்து 2 வது தபசில் இடங்களில் இரும்பு கம்பி வேலி அமைத்தும் பல்வேறு முறையிலும் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். எனவே மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு பரிகாரம் கோரி எதிர்கோரிக்கையுடன் கூடிய எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே மனுதாரரால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிருரையின் சுருக்கம்</u>:-

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக் கூடியதல்ல. எதிர்மனுதாரர் தரப்பில் பிராது பத்தி 16ல் 2 வது தபசில் சொத்து உள்ளிட்ட 1 வது தபசில் சொத்துக்களை எதிர்மனதாரரின் முன் உடைமையாளர்கள் கிரையம் பெற்று பின்னர் எதிர்மனுதாரர் கிரையம் பெற்று சொத்துக்களை சுற்றிலும் இருந்த பழைய வேலிகளை அப்புறப்படுத்திவிட்டு கல்தூண்கள் நட்டி, கம்பிவேலி அமைத்து மேற்படி சொத்துக்களில் எலுமிச்சை கன்றுகள் வைத்து அனுபவம் செய்து வருவதையும், மேற்படி சொத்திற்குள் செல்வதற்காக கேட் அமைக்கப்பட்டுள்ளதையும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அசல் வழக்கிற்கு கடந்த 21.03.2022 ஆம் தேதியன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னர் மூன்று வருடங்கள் கழித்து 21.02.2023 ஆம் தேதியன்று எழுவினாக்கள் வனையப்பட்ட பின்னர் மீண்டும் இரண்டு வருடங்கள் கழித்து எதிர்கோரிக்கையுடன் கூடிய எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி கோரி மனுதாரரால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மிகவும் காலம் கடந்து எதிர்கோரிக்கை தாக்கல் செய்யக்கோருவது ஏற்கக் கூடியதல்ல. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால்

"இம்மனு அனுமதிக்கக் கூடியதா?"

என்பதே ஆகும்.

5. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>பிரச்சனைக்கான தீர்வு</u>**:–

இந்த மனுவின் மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் பிரதிவாதி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஆவார். அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு, வாதி, 2 ஆம் தபசில் சொத்துக்களில் சிறிது சிறிதாக அத்துமீறி உள்ளே நுழைந்து 2 வது தபசில் இடங்களில் இரும்பு கம்பி வேலி அமைத்தும் பல்வேறு முறையிலும் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். எனவே மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு பரிகாரம் கோரி எதிர்கோரிக்கையுடன் கூடிய எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்பதால் மேற்படி எதிர்கோரிக்கையுடன் கூடிய எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்று வாதிட்டிருக்கிறார்.

7. எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர் பிராது பத்தி 16 ல் 2 வது தபசில் சொத்து உள்ளிட்ட 1 வது தபசில் சொத்துக்களை எதிர்மனதாரரின் முன் உடைமையாளர்கள் கிரையம் பெற்று பின்னர் எதிர்மனுதாரர் கிரையம் பெற்று சொத்துக்களை சுற்றிலும் இருந்த பழைய வேலிகளை அப்புறப்படுத்திவிட்டு கல்தூண்கள் நட்டி, கம்பிவேலி அமைத்து மேற்படி சொத்துக்களில் எலுமிச்சை கன்றுகள் வைத்து அனுபவம் செய்து வருவதையும், மேற்படி சொத்திற்குள் செல்வதற்காக கேட் அமைக்கப்பட்டுள்ளதையும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அசல் வழக்கிற்கு கடந்த 21.03.2022 ஆம் தேதியன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னர் மூன்று வருடங்கள் கழித்து 21.02.2023 ஆம் தேதியன்று எழுவினாக்கள் வனையப்பட்ட பின்னர் மீண்டும் இரண்டு வருடங்கள் கழித்து எதிர்கோரிக்கையுடன் கூடிய எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி கோரி மனுதாரரால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மிகவும் காலம் கடந்து எதிர்கோரிக்கை தாக்கல் செய்யக்கோருவது ஏற்கக் கூடியதல்ல என்றும், எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிட்டிருக்கிறார்.

8. இந்த மனுவின் மனுதாரர், பிராது 2 வது தபசில் சொத்தில் வழக்கிற்குப் பின்னிட்டு எதிர்மனுதாரர்/வாதி பலவகையில் ஆக்கிரமித்து இரும்பு கேட் அமைத்துள்ளதாகவும், எனவே அதனை அகற்றும்பொருட்டு எதிர்கோரிக்கை பரிகாரம்

கோர வேண்டியுள்ளதால் தற்போது எதிர்கோரிக்கையுடன் கூடிய கூடுதல் எதிர்வழக்குரை ஏற்றுக்கொள்ள அனுமதி கோரி இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறார். அசல் வழக்கானது விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது 31.03.2021 ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் 21.03.2022 ஆம் தேதியன்று தான் அதாவது ஒரு வருட காலத்திற்குப்பின்னர் தான் இந்த மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும், அதன்பின்னிட்டு 06.03.2023 ஆம் தேதியன்று எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், 15.07.2025 ஆம் தேதியன்று அதாவது இரண்டு வருடங்களுக்குப் பின்னிட்டு மனுதாரரால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. மனுதாரர் தரப்பில் இந்த மனுவில் மேற்படி காலதாமதத்திற்கான காரணங்கள் எதுவும் குறிப்பிட்டு கூறப்படவில்லை. இந்நிலையில் **Ashok kumar Kalra ..vs.. Wing CDR Surendra Agnihotri and others** என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளதை கவனத்தில்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

> Having said so, this does not give absolute right to the defendant to file the counter-claim with substantive delay, even if the limitation period prescribed has not elapsed. The court has to take into consideration the outer limit for filing the counter-claim, which is pegged till the issues are framed. The court in such cases have the discretion to entertain filing of the counter-claim, after taking into consideration and evaluating inclusive factors provided below which are only illustrative, though not exhaustive:
>
> i. Period of delay.
>
> ii. Prescribed limitation period for the cause of action pleaded.
>
> iii. Reason for the delay.
>
> iv. Defendant's assertion of his right.

v. Similarity of cause of action between the main suit and the counter-claim

vi. Cost of fresh litigation.

vii. Injustice and abuse of process.

viii. Prejudice to the opposite party.

ix. and facts and circumstances of each case.

x. In any case, not after framing of the issues.

Given the fact that on the facts of the present case, a counter-claim was filed after the issues were framed, the said counter-claim cannot be filed as per the law laid down by this judgment. Consequently the Special Leave Petition is dismissed.

எனவே மேற்படி முன்தீர்வின் அடிப்படையில் இந்த வழக்கின் பொருண்மைகளை பரிசீலிக்கும்போது இந்த வழக்கிலும் எழுவினாக்கள் வனையப்பட்டு வழக்கானது விசாரணைக்காக ஏற்பட்டுள்ள நிலையில் மிகவும் காலம் கடந்து எதிர்கோரிக்கையுடன் கூடிய எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி கோரியுள்ள மனுதாரரின் கோரிக்கையானது ஏற்றுக்கொள்ளக் கூடியது இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2025.11.27 17:16:32 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

**<u>மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>**
இல்லை

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2025.11.27 17:16:39 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

------------------------------------

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

இடைநிலை மனு எண்.3/2025

அதன்

அசல் வழக்கு எண்.94/2021

உத்தரவு (நேரிய)

நாள்: 27.11.2025

------------------------------------